Thalaivaasal
தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 117 thalaivaasaltv@gmail.com வெள்ளிக்கிழமை பெப்ரவரி 05, 2021
தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news

# தடைகளை உடைத்து பேரணி முள்ளிவாய்க்கால் நினைவுத்திடலை அடைந்தது!

## நாளை வவுனியா, மன்னார் ஊடக பயணிக்கும்



பொத்துவிலில் தொடங்கிய பேரணி பல்வேறு நெருக்கடிகளைக் கடந்து முல்லைத்தீவின் ஊடாக முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை சென்றடைந்து அங்கு வணக்க நிகழ்வு நடைபெற்றது.

இன்று காலை திருகோணமலை நகரில் இருந்து தொடங்கிய பேரணி திருகோணமலை மடத்தடிச் சந்தியை அடைந்தபோது அங்கு நின்ற சிங்களமொழி பேசுகின்ற கும்பலால் வழி மறிக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் பயணித்த வாகனத்தின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன.

03

## பேரணியை குழப்புவதற்கு யார் எத்தகைய தாக்குதலை நடத்தினாலும் நாம் அஞ்சப்போவதில்லை



பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணியை குழப்புவதற்கு யார் எத்தகைய தாக்குதலை நடத்தினாலும், நாம் அஞ்சப்போவதில்லை என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

03

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி: விஷமிகளினால் பேரணிக்கு இடையூறு

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணியின் மூன்றாவது நாள் இன்று (வெள்ளிக்கிழமை) திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் பேரணி பயணிக்கும் வீதிகளில் ஆணிகள் எறியப்பட்டு, பேரணியில் பங்கேற்ற வாகனங்களின் டயர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சிவில் சமூக பிரதிநிதிகள் பயணித்த வாகனம் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற

03

## பேரணிக்கு தடை கோரி சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தள்ளுபடி!

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை வழி போராட்டத்தினை மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் தடை விதிக்க கோரி சுன்னாகம் பொலிஸார் தாக்கல் செய்த தடை உத்தரவு விண்ணப்பத்தினை நீதவான் நிபந்தனைகளுடன் தள்ளுபடி செய்துள்ளார்.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கோவிட் -19 சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பம் சுன்னாகம்

03

## போராட்டத்துக்கான தடை உத்தரவை நீக்கியது யாழ்.நீதிமன்றம்

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை வழி போராட்டம் நடைபெற்றுவரும் நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள்

03

## பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குள் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளுக்கு தடை

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை வழி போராட்டம் ஆரம்பமாகியுள்ள நிலையில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள்

03

## போராட்டக்களத்தில் நாமும் நிச்சயம் கரம் கோர்ப்போம்!



"தமிழ் பேசும் இலங்கையர்களின் தேசிய இருப்பை அழித்தொழிக்கும் ராஜபக்ச அரசு, தமிழ் மொழியைப் பேசுகின்ற, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதங்களைக் கடைபிடிக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களை ஜனநாயகப் போராட்டங்களை நோக்கித் தள்ளிவிட்டுள்ளது."

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"நடப்பு ராஜபக்ச அரசின் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற என்ற கூச்சல் நடைமுறையில், 'ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம்' என்பதில் வந்து நிற்கின்றது. இதை நாம் இன்று தெளிவாகப்

03




தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# “பொத்துவில் முதல் பொலிகண்டிவரை” பேரணியில் இன்று...














# வங்கி கட்டுமான பணியாளருக்கு கொரோனா: யாழ். நகரில் 4 கடைகள் மூடப்பட்டு 32 பேர் தனிமைப்படுத்தல்!

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைக்கப்பட்டு வரும் வங்கி கட்டுமானப் பணிக்க வருகை தந்திருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து யாழ். நகரில் உள்ள 4 கடைகள் மூடப்பட்டு 32 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை வீதியில் புதிதாக அமைக்கப்படும் வங்கி கட்டடத்துக்கு வளிச்சீராக்கி (AC) பொருத்துவதற்கு வருகை தந்த தென்னிலங்கையைச் சேர்ந்தவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் நகரில் 4 கடைகள் மூடப்பட்டுள்ளதுடன் 32 பேர் சுயதனிமைபடுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை வீதியில் புதிதாக அமைக்கப்படும் வங்கி கட்டடத்துக்கு வளிச்சீராக்கி பொருத்துவதற்கு கடந்த மாதம் வருகை தந்த ஒருவருக்கு எழுதுமட்டுவாழ் வீதித் தடையில் வைத்து பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டன. அவருக்கு தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் புதன்கிழமை உறுதிப்படுத்தபட்டுள்ளது.

அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட நபர் வழங்கியிருந்த தகவலின் அடிப்படையில் அவர் யாழ்ப்பாணம் நாக விகாரை விடுதியில் தங்கியிருந்தமை கண்டறியப்பட்டது.

அத்துடன், வங்கிக் கட்டட வேலைகள் நிறுத்தப்பட்டதுடன், தொழிலாளிகள் சிலர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர் சென்றதாகத் தெரிவித்த நாக விகாரைக்கு அண்மையில் உள்ள மருந்தகம் மூடப்பட்டு அங்கு பணியாற்றுபவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த நபர் சென்றிருந்தார் என்ற காரணத்தால் யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியில் உள்ள உணவகம், வைத்தியசாலை வீதியில் உள்ள ஐஸ்கிறீம் கடையுடன் கூடிய உணவகம் உள்ளிட்டவையும் மூடப்பட்டுள்ளன.

இவ்வாறு மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ளவர்கள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தபட்டு தொற்று இல்லை என அறிக்கை கிடைத்தால் திறக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பேரணியை...

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணி இன்று மூன்றாவது நாளாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் திருகோணமலை- மடத்தடிச் சந்தியில் வைத்து, எம்.கே.சிவாஜிலிங்கம் பயணித்த வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் கூறியுள்ளதாவது, “திருகோணமலை- மடத்தடிச் சந்தியில் வைத்து நானும், திருமதி அனந்தி சசிதரனும் பயணித்த வாகனத்தை பெரும்பான்மையினர் தாக்கினர்.

இவ்வாறு தாக்குதலை நடத்தியவர்களின் கைகளில் பெற்றோல் போத்தல்களை அவதானிக்க கூடியதாக இருந்தது. மேலும் பொலிஸாரும் பாதுகாப்பு பணிகளில் இருந்த வேளையில்தான், இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் விழ விழ எழுவோம், வீருகொண்டு எழுவோம் என்றதன் அடிப்படையிலேயே நாங்கள் இந்த பயணத்தை தொடர்வோம். மேலும் இத்தகைய தாக்குதலுக்கு நாங்கள் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை.

இந்த பேரணியை நடத்துவதற்கு எத்தகைய தடைகள் வந்தாலும் அதனை முறியடித்து பொலிகண்டி வரை நிச்சயம் முன்னேறி செல்வோம்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரச மரியாதையுடன்...

உறுப்பினர் சாணக்கியன் பயணித்த வாகனம், மேலும் சில வாகனங்களின் டயர்களே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளது

புல்மோட்டையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்துகொண்டிருந்தபோதே இத்தகைய சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சில வாகனங்கள் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறான அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் திட்டமிட்டவாறு பேரணி தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## போராட்டத்துக்கான...

நாளைவரை ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்த வழங்கிய தடை உத்தரவை நீதிமன்றம் நீக்கம் செய்தது.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஒருமுக விளக்கத்தில் வழங்கிய கட்டளையை பிரதிவாதிகள் முன்வைத்த ஆட்சேபனையை அடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நீக்கியது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை தடை உத்தரவு வழங்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன்,சட்டத்தரணி க.சுகாஷ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வேலன் சுவாமிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமாணவர் ஒன்றியப் பிரநிதிகள் உள்ளிட்டோருக்கு இந்த தடை உத்தரவு வழங்கப்பட்டது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கோவிட் -19 சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ்

இந்த விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டுக்கு கலங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் எடுத்துரைத்தனர்.

அதனடிப்படையில் பிரதிவாதிகள் முன்னிலையாகாத நிலையில் தடை உத்தரவை நீதிமன்றம் வழங்கியது.

இந்நிலையில் குறித்த வழக்கு இன்றைய தினம் இந்த தடை உத்தரவு வழங்குகள் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் மீள் விசாரணைக்கு வந்தன.

சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன் வி.திருக்குமரன் உள்ளிட்டோர் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையை முன்வைத்தனர்.

அதனால் ஒருமுக கட்டளையாக வழங்கப்பட்ட தடை உத்தரவை நீக்கிய நீதிமன்றம் கோவிட் -19 நோய்த்தொற்று சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டால்அதன் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை என்று எடுக்க பொலிஸாரை அறிவுறுத்தியது.

## தடைகளை உடைத்து...

அதன் தொடராக வாகனத் தொடரணி புல்மோட்டைப் பகுதியை அண்மித்தபோது, வீதியில் தாரில் ஆணிகள் பொருத்தப்பட்டிருந்த நிலையில் வாகனத் தொடரணியில் பயணித்த எட்டு வாகனங்களுக்கு காற்றுப் போனதால் பயணத்தில் தாமதம் ஏற்பட்டது.

இருந்தபோதிலும் இன்று நண்பலுக்குப் பின்னர் நாயாற்றுப் பகுதி ஊடாக முல்லைத்தீவை நோக்கி பேரணி நகர்ந்தது. நாயாற்றிலே பேரணியை வரவேற்பதற்கு காத்திருந்த பிரமுகர்களை, பொலிஸார் போராட்டத்தில் பங்கேற்கக்கூடாது என்று தெரிவித்து கட்டளையை வழங்கியிருந்தனர்.

இருந்தபோதிலும் போராட்டம் தொடர்ந்தும் நகர்ந்து வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழரசுக்கட்சித் தலை மாவை சேனாதிராஜா உட்பட்ட பிரமுகர்கள் பேரணியில் இணைந்துகொண்டனர்.

முல்லைத்தீவு நகரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு பேரணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

தற்போது முள்ளிவாய்க்கால் நினைவுத்திடலில் திரண்டுள்ள பேரணியில் பங்கேற்ற உணர்வாளர்கள் அங்கு வணக்க நிகழ்வில் பங்கெடுத்து வணக்கம் செலுத்தி மதத் தலைவர்களால் சிறப்பு பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## பருத்தித்துறை...

இன்று முதல் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்த பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கே இந்த தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கோவிட் -19 சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராயந்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன், பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று தடை உத்தரவு வழங்கி கட்டளை வழங்கினார்.

பேரணியில் பங்கேற்போர் பல மாவட்டங்கள் ஊடாக அங்குள்ளவர்களையும் இணைத்து வருவதனால் கோவிட் -19 நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால் இந்த தடை உத்தரவு வழங்கப்படுகிறது என்று நீதிவான் கட்டளையில் சுட்டிக்காட்டினார்.

இந்தப் போராட்டம் மூன்றாம் நாளான இன்று காலை திருகோணமலையில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பொலிகண்டியை வந்தடையும் என்பது குறிப்பிடத்தக்கது

## போராட்டக்களத்தில்...

புரிந்துகொண்டுள்ளோம். இந்த ஏகபோக கொள்கையை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. இதை இந்த நாட்டு அரசும், உலகமும் புரிந்துகொள்ள வேண்டும்.

உண்மையில் ஒளிவு மறைவு இல்லாமல் இதை இந்த அரசு செய்வதை எண்ணி நாம் மகிழத்தான் வேண்டும். உள்ளொன்று வைத்து புறமொன்று செய்யவில்லையே, இவர்கள்..! இந்தநிலையில், அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டி இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக, இந்த நாட்டில் எமது இருப்பை உறுதி செய்துகொள்ள நாம் போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த தேசிய ஜனநாயகப் போராட்டம் இப்போது ஆரம்பித்திருப்பதை எண்ணி மகிழ்கின்றேன்.

இந்த இலங்கை திருநாடு, ‘பன்மொழி, பன்மத, பல்லின’ அடிப்படையைக் கொண்ட பன்மைத்துவ நாடு என்ற இலக்கு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

இந்த நாட்டின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பங்கும், இன்றைய இலங்கை நாட்டின் ஆட்சி உரிமை, இறைமை ஆகியவற்றில் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின்ற மறுக்கப்பட முடியாத உரிமையும் உறுதிப்படுத்தப் படும்வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

தமிழ் பேசும் மக்களையும் உள்ளடக்கியதே இலங்கை நாடு என்ற அடிப்படை உண்மையை சிங்கள முற்போக்கு சிந்தனையாளர்கள் ஏற்றுக்கொண்டு கண் திறக்கும்வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

இதுவே ராஜபக்ச ஆட்சியின் ‘ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி’ என்ற கொள்கைக்கு உரிய தர்க்கரீதியான அரசியல் பதிலாகும்.

இந்த ஜனநாயகப் போராட்டத்துக்கு எமது ஆதரவை நல்குகின்றோம். ஜனநாயகப் போராட்டக் களத்தில் நிச்சயமாக நாம் கரம் கோர்ப்போம்” - என்றுள்ளது.

## பேரணிக்கு...

பொலிஸாரால் கடந்த புதன்கிழமை மாலை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அன்றைய தினம் குறித்த மனுவினை இன்றைய தினத்திற்கு திகதியிட்டு நீதவான் ஒத்திவைத்தார்.

அதன் பிரகாரம் இன்றைய தினம் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது , மக்களுக்கு பேச்சு, கருத்து மற்றும் ஒன்று கூடும் சுதந்திரம் உண்டு என என சுட்டிக்காட்டிய நீதவான் , பேரணியில் சுகாதார நடைமுறைகளுடன் மக்கள் கலந்து கொள்ள முடியும் என கூறி மனுவினை தள்ளுபடி செய்தார்.

அதேவேளை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்கத்திற்குள், பேரணிக்கு தடை கோரி சாவகச்சேரி பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.





# ஆயிரம் ரூபாய் சம்பள விவகாரம்: முடங்கியது மலையகம்!

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாயாக அதிகரிக்குமாறு கோரி ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டமொன்று இன்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் குறித்த அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்களுக்கும், பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையே பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் குறித்து இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் இணக்கம் ஏற்பட்டிருக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையிலும் எந்ததொரு சாதகமான தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆகவே பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வேதன அதிகரிப்பு குறித்த விடயத்தை தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சம்பள நிர்ணய சபையிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்நிலையில் நாளை, சம்பள நிர்ணய சபையில் இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலையிலேயே இ.தொ.கா.வின் பொதுசெயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், அதன் ஆரம்பகட்டமாக முதலாளிமார் சம்மேளனத்திற்கும் சம்பள நிர்ணய சபைக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு அழுத்தம் கொடுக்கும் முன்னோடி ஏற்பாடாக இன்று அமைதியான ஒரு நாள் பணிபகிஷ்கரிப்பை நடத்த அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி, ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அமைச்சர்களை கொரோனா தக்காதா?

### முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் விந்தான் கேள்வி




காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடியலையும் தாய்மாரை தாக்கும் கொரோனா அரச அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவையோ அல்லது சிறீலங்கா சுதந்திரக்கட்சியினரையோ தாக்கதாவென கேள்வி எழுப்பியுள்ளார் தமிழீழ விடுதலை இயக்க முக்கியஸ்தரும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினருமான விந்தன் கனகரட்ணம்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளித்த அவர் நேற்றைய தினமான வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி இலங்கையின் சுதந்திர தினத்தில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தார்கள்.

அங்கு வருகை தந்த இலங்கை காவல்துறையினர் கொரோனா தொற்று ஏற்படலாமென தெரிவித்து அவர்களது அகிம்சை வழி போராட்டத்தை தடுக்க முற்பட்டனர்.

ஆனாலும் போராட்டத்திலீடுபட்டிருந்த தாய்மார் போதிய சமூக இடைவெளியை பேணி முகக்கவசம் அணிந்திருந்தனர்.

ஆனால் அதேவேளை நல்லூர் கோவில் வீதியில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஏற்பாட்டில் கொரோனா பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல் ஊர்வலமொன்று நடத்தப்பட்டிருந்தது.அரச அமைச்சர் தயாசிறி ஜெயசேகர ,சிங்கள காடையர்கள்,இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் வாள் வெட்டு ஆவா குழுவினரென பலரும் குறித்த ஊர்வலத்தில் பங்கெடுத்திருந்தனர்.

ஆனால் அவர்களை கொரோனா தாக்கதென்பதை இலங்கை காவல்துறையினர் கண்டறிந்துள்ளனர்.

அதனால் அவர்களது ஊர்வலத்தை நிறுத்துமாறு இலங்கை காவல்துறை கேட்கவில்லை.

அதேபோன்று வீரசிங்கம் மண்டபத்தில் கட்சி கூட்டம் மண்டபம் நிறைந்ததாக நடத்தப்பட்டுள்ளது.

அங்கும் கொரோனா வந்தடையாதென்பதை இலங்கை காவல்துறை கண்டறிந்துள்ளதாவென கேள்வி எழுப்பியுள்ளார் விந்தன் கனகரட்ணம்.

உண்மையில் இலங்கை ஜனநாயக நாடென இப்போதும் எவராயினும் சொல்வார்கள் ஆனால் அவர்களது மனநிலை பற்றி ஆராயவேண்டும்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையென தொடரும் அமைதி பேரணி மீது இன்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.அவர்கள் பயணிக்கின்ற வாகனங்கள் தொடர்ந்து பயணிக்காதிருக்க வீதிகளில் முட்கம்பிகள், ஆணிகள் போடப்படுகின்றன.

தமிழ் மக்களிற்கு பாதுகாப்பில்லாத நாடாக இலங்கை இருக்கின்றது.பேசுவதற்கு எழுதுவதற்கு எதற்குமே இலங்கையில் பாதுகாப்பில்லையெனவும் விந்தன் கனகரட்ணம் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரவி கருணாநாயக்க மற்றும் அலோசியஸ்க்கு பிணை

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பேப்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

இலஞ்ச ஊழல் வழக்கு தொடர்பாக அவர்கள் மீது குற்றப்பத்திரம், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே இந்த பிணை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் தலா 5 இலட்சம் பெறுமதியான ரொக்கப் பிணையிலும் தலா 50 இலட்சம் பெறுமதியான சரீர பிணையிலும் செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரத்தில், பேசுபொருளான மொனார்க் தொடர்மாடி சொகுசு குடியிருப்பை மையப்படுத்தி, இலஞ்ச ஊழல் விசாரணை சட்டத்தின் 19 ( உ) பிரிவின் கீழ் முதலாம், 2 ஆம் பிரதிவாதிகளாக முறையே ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன அலோசியஸ் ஆகியோர் பெயரிடப்பட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## குடிநீர் அசுத்தமாகியுள்ளதாக வலி. வடக்கு தவிசாளரிடம் முறையீடு!



வலி.வடக்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்ட நீர் தங்கியில் இருந்து பெறப்பட்ட குடிநீர் அசுத்தமாக உள்ளதாக தவிசாளரிடம் முறையிட்டுள்ளனர்.

வலி.வடக்கில் இருந்து நீண்டகாலமாக இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் வசித்தவர்கள் தற்போது தமது சொந்த இடங்களில் மீள் குடியேறி வருகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து இருந்தமையால் , அப்பகுதி கிணறுகள் உரிய முறையில் பராமரிப்பின்றி காணப்பட்டமையினால் அப்பகுதி மக்களுக்கு வலி.வடக்கு பிரதேச சபையினால் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்நிலையில் நேற்றைய தினம் வலி.வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள காங்கேசன்துறை பகுதியில் பிரதேச சபையினால் வழங்கப்பட்ட நீர் தாங்கியில் இருந்து நீரினை பெற்ற போது அவற்றுள் குடம்பிகள் காணப்பட்டுள்ளன.

அதனால் அந்நீரினை பயன்படுத்த முடியாத நிலையில் அது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களால் வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளருக்கு முறையிடப்பட்டுள்ளது. அதன் போது , நீர் தாங்கி உரிய முறையில் சுத்திகரிக்காதமையால் தான் நீர் மாசடைந்து இருக்கும் எனவும், அது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்துள்ளார்.

அதேவேளை அப்பகுதியில் மீள் குடியேறிய மக்களின் கிணறுகளை சுத்தம் செய்து புனரமைப்பு செய்வதற்கு நிதி வழங்கப்படும் கூறப்பட்ட போதிலும் , பல மாதங்களாக கிணறு புனரமைப்பு செய்வதற்கான நிதி இன்னமும் வழங்கப்படவில்லை.

அதனால் அப்பகுதி மக்கள் குடிநீருக்கு அல்லல் பட்டு வருகின்றனர். தமது கிணறுகளை சுத்தம் செய்து புனரமைத்து தர விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.